மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :— திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 04 ம் நாள் வியாழக்கிழமை

இ.மஎண்.08/2023
உள்
அசல் வழக்கு எண்.28/2018
————————

பி.நாராயணசாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பி.ராமசாமி செட்டியார்
2. பி.சின்னத்தாய் (எ) சுப்புலட்சுமி (இறப்பு — நீக்கம்)
3. பி.ரவிப்பாண்டியன்
4. பி.சீனிவாசன்
5. பி.கண்ணன்
6. எல்.சுப்பம்மாள்
7. எல்.சீனிவாசன்
8. எல்.ஜெயலட்சுமி
9. சீனியம்மாள்
10. கிருஷ்ணவேணி
11. ராஜலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 04.10.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 15.12.2023—ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரரே ஆஜராகியும், 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.முத்துக்கண்ணு அவர்கள் ஆஜராகியும், 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.மாரிச்சாமி அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், அசல் வழக்கில்

06.09.2019 ம் தேதியன்று பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிவு கட்டியுள்ளதை (DW Closed) திரும்ப கோப்பில் எடுத்து (Reopen) மீண்டும் குறுக்குவிசாரணை செய்ய அனுமதித்தும் தக்க உத்தரவுகள் பிறப்பிக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

வழக்கில் 1ம் பிரதிவாதி ராமசாமி செட்டியார் மூலமாக 31.07.2019 ல் முதல்விசாரணையும், 07.08.2019 தேதியன்று பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிவு கட்டப்பட்டுள்ளது. மேற்படி 06.09.2019 ம் தேதியில் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிவு கட்டியிருந்த நிலையில் அசல் வழக்கில் இ.ம.எண்.03/2020, இ.ம.எண்.02/2021 மற்றும் இ.ம.எண்.06/2021 ஆகியவற்றின் மீது சீர்திருத்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று சீர்திருத்த மனுக்கள் மீது 1ம் பிரதிவாதி ராமசாமி செட்டியார் என்பவரிடம் மீண்டும் குறுக்குவிசாரணை நடத்தப்பட வேண்டியது நியாயமாயும், அவசியமாயும் உள்ளது. அவ்வாறு மறு குறுக்குவிசாரணை நடத்தாதபட்சத்தில் மனுதாரர்/வாதிக்கு அனேக கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். மேலும், 1ம் பிரதிவாதி மீது 07.08.2019 ம் தேதியில் நடந்த குறுக்குவிசாரணையில் ஈடுபட்ட விஷயங்களை மறு குறுக்குவிசாரணை மூலம் வெளிக்கொணர்ந்து வாதி வழக்கின் உண்மைத்தன்மையை நீதிமன்றத்தில் ருசுப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. 1ம் பிரதிவாதியை மறுகுறுக்குவிசாணை நடத்த வேண்டியதை முன்னிட்டு 06.09.2019 தேதியன்று பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிவு கட்டப்பட்டுள்ளதை திரும்பப் பெற்று கோப்பில் எடுக்க உத்தரவு பிறப்பிக்கக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 4 மற்றும் 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்</u>:-**

இதில் வியக்தமாய் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர ஏனையவற்றை உண்மையில்லை என எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

அசல்வழக்கானது ஏற்கனவே முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கை வீண் காலதாமதம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், 1ம் பிரதிவாதி மூத்த குடிமகனாக இருந்து வீண் அலைக்கழிவு செய்ய வேண்டுமென்ற

எண்ணத்தோடும், 1 ம் பிரதிவாதி ஏற்கனவே முழு குறுக்குவிசாரணை செய்த நிலையில் மீண்டும் விசாரிக்க மனு செய்துள்ளதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

6) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

7) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

8) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**<u>9) தீர்வு</u>:-**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கம் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் அசல் வழக்கில் 06.09.2019 ம் தேதியன்று பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிவு கட்டியுள்ளதை (DW Closed) திரும்ப கோப்பில் எடுத்து (Reopen) மீண்டும் குறுக்குவிசாரணை செய்ய அனுமதித்தும் தக்க உத்தரவுகள் பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. இருப்பினும், இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரையம் மற்றும் இதர விரையங்களை கருத்திற்கொண்டு மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு செலவு

தொகையாக ரூ.300/–ஐ வரும் 10.01.2024ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் தக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க வாய்தா – 10.01.2024

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அசல் வழக்கில் 06.09.2019ம் தேதியன்று பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிவு கட்டியுள்ளதை (DW Closed) திரும்ப கோப்பில் எடுத்து (Reopen) மீண்டும் குறுக்குவிசாரணை செய்ய அனுமதித்தும் தக்க உத்தரவுகள் பிறப்பிக்கக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு செலவு தொகையாக ரூ.300/–ஐ வரும் 10.01.2024ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் தக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க வாய்தா – 10.01.2024

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 04ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.